# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.28 (L.W.52)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.K.V.Saravanan | Caste | : Gavara Naidu |
| Father's Name | : (Late) R.Veeraswamy | Calling | : Associate Professor |
| Village | : Thorapadi | Religion | : Hindu |
| Taluk | : Vellore | Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.01.2025.

(A2 to A5 present. A1 and A6 absent and their absence condoned on filing u/s 317 of Cr.P.C. petition)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.25 P.M.**

நான் தற்போது வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் இணை பேராசிரியாராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 25.06.2015 அன்று அரசு வேலூர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசரியராக பணிபுரிந்து வந்த காலத்தில் 25.06.2015 வியாழக்கிழமை அன்று 24 மணி நேர பணியில் இருந்தபோது எஸ்.3 யூனிட்டை சேர்ந்த 25 வயதுடைய ஷமீல்பாஷா என்ற உள்நோயாளியை நரம்பியல் துறை நிபுணரும், எலும்பியல் துறை நிபுணரும் அளித்த பரிந்துரையின்படி அவரை சென்னை பொது மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்புவதற்காக அவரை டிஸ்சார்ஜ் செய்து

சென்னை பொது மருத்துவமனைக்கு மேல்சிசிச்சைக்காக பரிந்துரை செய்து அனுப்பிவைத்தேன்.

25.06.2015 அன்று நான் சர்ஜரி 4 யூனிட்டில் பணியில் இருந்தேன். மேற்படி ஷமீல்பாஷா சர்ஜரி 3–ல் சிசிக்சை பெற்றிருந்தார். அவருக்கு அன்று காலையில் மேல் சிகிச்க்காக 108 ஆம்புலன்ஸ் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த ஆம்புலன்ஸ் குறிப்பிட்ட நேரத்தில வந்திருந்தால் சர்ஜரி 3–ல் உள்ள பணி மருத்துவரே அந்த நபருக்கு சான்று தந்து சென்னைக்கு அனுப்பியிருப்பார்.

மேற்படி ஆம்புலன்ஸ் வருவதற்கு கால தாமதம் ஆகி இரவு 09.30 மணிக்குத்தான் வந்தது. அப்போது சர்ஜரி 3–ல் உள்ள பணி மருத்துவர் இல்லததால் அன்று எனக்கு 24 மணி நேர பணி இருந்ததால் சர்ஜரி 4 ல் இருந்த நான் மேற்படி ஷமீல்பாஷாவை மேல்சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்புவதற்கு சான்றளித்தேன்.

நான் அவரிடம் பேசியபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது இரண்டு கைகளையும் தூக்க முடியவில்லை என்று சொன்னார். அவரது கைகள் வலுவிழந்திருந்தது என்று நான் அவருடைய மருத்துவ குறிப்பில் குறித்து அவரை மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்து அனுப்பியிருந்தேன். அதற்கான காயமுற்ற நபரின் case sheet–ன் இரண்டு தாள்களில் இரண்டாவது தாளில் அதற்கான குறிப்புகள் எழுதி கையெழுத்து போட்டேன். அந்த இரண்டு தாள்கள் அடங்கிய case sheet அ.த.சா.ஆ.51.

ஏற்கனவே அ.த.சா.ஆ.50–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் 3 பகுதியாக பிரிக்கப்பட்ட தாளில் 2 வது பகுதியில்

"Assault with multiple injuries referred to Rajiv Gandhi Government Medical College Hospital, Chennai" என்று நான் சுருக்கமாக எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தேன். 18.08.2016–ல் நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் என்னை விசாரிக்க நான் வாக்குமூலம் கொடுத்தேன் அதில் நான் கையெழுத்து போட்டேன். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரணை செய்தபோது நான் வாக்குமூலம் அளித்த செய்திகளை அவர்கள் எழுதிக்கொண்டார்களா என்றால் நான் case sheet– ல் எழுதியதை கூறினேன் அதை அவர்கள் எழுதிக்கொண்டார்கள். நோயாளியை இதர மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு தயாரித்த நிலையில் அப்போது சர்ஜரி 3–ல் பணியில் இருந்த மருத்துவர் இல்லாத நிலையில் நான் நோயாளியை மேல் சிகிச்சைக்கு பரிந்துரைத்தேன்.

போலீசார் என்னை விசாரித்தபோது case sheet–ன் அசல் ஆவணங்களை படித்து பார்த்தான் பதில் அளித்தேன். நான் நோயாளிக்கு பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.51 ஒளிநகல் ஆவணம்தான். அதில் சில எழுத்துக்கள் அந்த தாளின் ஓரத்தில் cut ஆகியுள்ளது.

சிபிசிஐடி போலிசார் விசாரிக்கும்போது கூறாத செய்திகளை நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் "Assault with multiple injuries referred to Rajiv Gandhi Government Medical

College Hospital, Chennai" என்று நான் சொன்னதில் Assault with multiple injuries என்பதை நான் case sheet–ல் எதை பார்த்து தெரிந்துக்கொண்டேன் என்றால் ஒன்றுக்கு மேற்பட்ட காயங்கள் என்று அ.த.சா.ஆ. 49 ல் தாள் 2 ல் Assault with multiple injuries என்று எழுதியுள்ளதை பாரத்து தெரிந்துக்கொண்டு மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன்.

அ.த.சா.ஆ.49–ல் தாள் 2 ல் Assault with multiple injuries என்று எழுதி அதற்கு கீழ் உள்ள multiple injury அந்த ஆவணத்தை சாட்சி மீண்டும் பார்த்து multiple injury என்ற வார்த்தை அடிக்கவில்லை என்றும் அது ஒளிநகலில் பார்க்கும்போது சற்று தெளிவற்று உள்ளதாக எடுத்துரைக்கிறார்.

Multiple injury என்ற வார்த்தை அடித்தல் திருத்தலாக எழுதப்பட்டிருக்கிறது என்றும் நான் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Multiple injury என்ற வார்த்தை சரியாக தெரியவில்லை என்றால் எனக்கு தெரிந்தது. அதனால் நான் அதை பார்த்து மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன்.

என்னுடைய முதல் விசாரணையில் நரம்பியல் துறை நிபுணரும், எலும்பியல் துறை நிபுணரும் பரிந்துரை செய்ததின் பேரில் என்று கூறியிருக்கிறேன் என்றால் 25.06.2015 அன்று ரம்யா என்ற நரம்பியல் மருத்துவர் அளித்த பரிந்துரை "will need to be referred to a higher centre for further treatment" என்று பரிந்துரை அளித்துள்ளார்.

25.06.2015 அன்று மருத்துவர் செந்தில்குமார் என்ற எலும்பியல் துறை மருத்துவர் "to be referred to NS (Neuro surgery) / plastic surgery

department GGH, Chennai" என்று பரிந்துரை அளித்திருந்தார். சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அ.த.சா.ஆ.51–ல் நான் அவ்வாறு எழுதி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் நோயாளியை மேல் சிகிச்சைக்காக discharge செய்வதற்காக இரவு 09.30 மணிக்கு விசாரித்து அவரிடம் பேசி அவரை மேல் சிகிச்சைக்காக அனுப்பினேன். அ.த.சா.ஆ.51 ஒளிநகலில் Assault with multiple injury என்ற வார்த்தை சரியில்லாமல் உள்ள நிலையில் அசல் ஆவணத்திலும் அவ்வாறு சரியில்லாமல் இருக்கும் என்றால் சரியல்ல.

நோயாளியை சர்ஜரி 3 பிரிவில் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்கு அனுப்பிய நிலையில் அந்த பிரிவில் நோயாளியின் என்ன என்ன ஆவணங்கள் பராமரித்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நோயாளியை நான் ஆம்புலன்ஸ் மூலமாக சென்னைக்கு அனுப்பியபோது அவருடன் எந்த மருத்துவ பணியாளர் சென்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் எந்தவித ஆவணங்களையும் கொடுக்கவில்லை என்றால் நான் நோயாளிக்கு

எந்தவித சிகிச்சையும் அளிக்கவில்லை. நான் கு.வி.மு.ச. பிரிவு 161(3) படி கொடுத்த வாக்குமூலத்திற்கும் சிபிசிஐடி போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் வேற்றுமை உள்ளது என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலிசார் கேட்டுக்கொண்டதிற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

**(விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.24 மணி)**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.31 15:50:19 +0530